IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

## C.C.No. 156/2022 P.W. 1/L.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஜேக்கப் ராஜ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 19.03.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனார் வேலைச் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னுடன் பிறந்த தம்பி. 02.03.2020 ம் தேதி காலை 05.00 மணி அளவில் நான் எனது தந்தையின் வீடான கண்ணன்கோட்டையில் அன்றையதினம் நான் தங்கியிருந்தேன். நான் வீட்டில் படுத்திருந்தபோது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஏன் இங்கு படுத்திருக்கிறாய் என்று கேட்டுக்கொண்டு கம்பியால் இடது கால், இடது கை, வலது தலை ஆகிய பகுதிகளில் என்னை தாக்கினார்.

2. மேலும், என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். நான் சத்தம் போட்டேன். அப்போது எனது சித்தி றோசிலி, சித்தப்பா ஆன்றணி ஆகியோர்கள் குற்றம் சுமத்தப்பட்ட நபரை விரட்டிவிட்டார்கள். அதன்பிறகு அவர் அங்கிருந்து சென்றுவிட்டார். என்னை எனது அக்கா ரீட்டா ஜாக்குலின், எனது அக்காவின் மகன் ஆகியோர்கள் சிகிட்சைக்காக ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். சம்பவம் சம்மந்தமாக நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள

கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யாததால் குறுக்கு விசாரை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.